**யார் அதிர்ஷ்டசாலி?**

சில
ரொபின் நீல சோப்பினுள்
வெள்ளித்தகடும், செப்புத்தகடும்
வைக்கப்பட்டிருக்கிறது!
வெள்ளித்தகட்டை பெறுபவருக்கு
ரூபா 500-00 - ம்
செப்புத்தகட்டை பெறுபவருக்கு
ரூபா 250-00 - ம்
பரிசாக வழங்கப்படும்.
இது கானு இன்டஸ்றீஸாரின் தயாரிப்பு
வடமாகாண ஏஜன்டுகள்:
ஏ. எஸ். சங்கரப்பிள்ளை & பிறதர்ஸ்
யாழ்ப்பாணம்.



egistered as a Newspaper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசீய தினசரி National Tamil Daily
மலர் 7 (29-1-66) இதழ் 350
[illegible]வசு தை 16 ஷவ்வால் பிறை 6 சனிக்கிழமை



**பீடிகளில் சிறந்தது!**

உழைப்போர்க்கு
உற்சாகமளிப்பது
முல்லா பீடிகளே
தயாரிப்பாளரும்
விநியோகஸ்தர்களும்:
முல்லா பீடி கம்பனி
கே.கே.எஸ் ரேட் - யாழ்ப்பாணம்.


# தொழிலாளருக்கு வாழ்வளிக்கும் சட்டம்

## விரைவில் வரும்; தொழிற் கமிஷனர் தகவல்

பம்பலப்பிட்டி, வெள்ளி

தொழிலாளர்களுக்கு வருமானத்தில் பங்கு கொடுப்பதுபற்றி விரிவாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட கமிஷனின் அறிக்கை விரைவில் வெளியிடப்படவிருக்கிறது. இந்த அறிக்கை வெளியானதும் வருமானத்தில் தொழிலாளருக்குப் பங்கு கிடைப்பதற்கான நகல் மசோதா உருவாக்கப்பட்டு பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படுமென்றும் இம்மசோதா சட்டமானதும் தொழிலாளருக்குப் பெரும்பயன் கிடைக்குமென்றும் நம்பப்படுகிறது.

நிர்வாகத்தில் தொழிலாளரும் பங்கு கொள்வதற்கு வசதி கிடைக்கும் வகையில் விரைவில் ஒரு சட்டம் கொண்டுவரப்படவிருக்கிறது. இதற்கான நகல் மசோதா தயாரிக்கப்பட்டு வருகிறது.

இத்தகவலைத் தொழிற் கமிஷனர் திரு. லிங்கன் அபயவீரா சென்றவாரம் கொள்ளுப்பிட்டி தேயிலைப்பிரசார சபை மண்டபத்தில் நடைபெற்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தொழிலாளர் கல்விபற்றிய கருத்தரங்கை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் தெரிவித்தார்.

## பாகிஸ்தான் மந்திரி சபையில் தீவிரமாறுதல் ஏற்படும்

### டாஷ்கண்ட் பிரகடனத்தை அடுத்து பல ஹேஷ்யங்கள்

ராவல்பிண்டி, ஜன. 28

டாஷ்கண்ட் பிரகடனத்தைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள நிலைமைக்கேற்ப பாகிஸ்தான் மந்திரி சபையில் பெரும் மாற்றங்கள் ஏற்படவிருப்பதாகக் கூறப்படுகிறது.

ஆளும் கட்சியான முஸ்லிம் லீக்கின் கொள்கையில் மாற்றங்கள் ஏற்படக்கூடும் என பார்வையாளர்களும் பத்திரிகையாளர்களும் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

ஜனதிபதி அயூப்கான் தமது சமீபத்திய பஞ்சாப் விஜயத்தின்போது பல அரசியற்கட்சித் தலைவர்களையும் பேச்சுவார்த்தைக்குஅழைத்திருக்கிறார்.

வருகிற பெப்ரவரி2-ம்திகதி மந்திரிசபையின் முக்கியகூட்டம் ஒன்று நடைபெறவிருப்பதாக அறியப்படுகிறது.

டாஷ்கண்ட் பிரகடனத்தை வரவேற்றிருக்கும் எதிர்க்கட்சிகளையும் மந்திரிசபையில் சேர்ப்பதன்மூலம், ஒப்பந்தத்தைப் பலப்படுத்த அயூப்கான் விரும்புவதாக மேலும் கூறப்படுகிறது. அவாமிலீக்கிலிருந்து வெளியேறிய மௌலாஞ பஷானி இத்தகைய தலைவர்களில் ஒருவர் என்றும், மந்திரிசபை விஸ்தரிப்பின் போது இவர் அதில் இடம்பெறுவது நிச்சயம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## இந்திய உயர் கோஷ்டி பாகிஸ்தான் செல்லும்

### நட்புறவை வளர்ப்பதில் திரு. பூட்டோ ஆர்வம்

புதுடில்லி, ஜன. 28

இந்தியா — பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளின் உறவையும் சீராகக் கொண்டுவரும் டாஷ்கண்ட் ஒப்பந்தத்தின் ஓர் அம்சமாக இந்திய உயர் தூதுக்குழு ஒன்று பாகிஸ்தான் செல்லவிருக்கிறது.

அடுத்தமாத முற்பகுதியில் செல்லுமென எதிர்பார்க்கப்படும் இந்த உயர்தர தூதுக்கோஷ்டியில் வெளிநாட்டு மந்திரி சுவர்ண்சிங், மந்திரி மனுபாய்ஷா, சஞ்சீவரெட்டி உட்படப் பலர் இடம்பெறுவார்கள் எனத் தெரிகிறது.

இருநாடுகளின் நல்லுறவையும் வளர்க்கும் பொருட்டு பாரத — பாகிஸ்தான் கூட்டுக் கமிட்டி ஒன்று அமைப்பது குறித்துத் தாம் ஆலோசித்து வருவதாயும், நெருக்கடியைக் குறைக்க இதுபோன்ற கமிட்டிக்கு டாஷ்கண்ட் பிரகடனம்வழி வகுப்பதாயும் வெளிநாட்டு மந்திரி திரு. பூட்டோ கூறினர்.

இருநாடுகளும் தங்கள் உறவை வளர்க்கும் அம்சத்தில் விஸ்வாசமாகச் செய்யப்பட்டு வருவதாய் உலகப் பார்வையாளர்கள் பலர் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

யுத்தத்தின்போது இருநாடுகளும் சிறைப்படுத்தியிருந்த கைதிகளை விடுவிக்கும் விஷயம் ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இருநாடுகளின் வர்த்தகத் தொடர்பை மீண்டும் ஆரம்பிக்கவும், கைப்பற்றிய பொருட்களைத் திரும்பவும் ஒப்படைக்கவும் உயர் தூதுகுழுவின் விஜயம் வழிசெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

—

## பாபாவுக்கு பாகிஸ்தான் வருத்தம்

கராச்சி, ஜன. 28

''டாக்டர் ஹோமிபாபா பிரபலமான அணுசக்தி விஞ்ஞானி மட்டுமல்ல, தூரதிருஷ்டியும் வாய்ந்தவர்'' எனப் பாகிஸ்தான் அணுசக்திக் கமிஷன் தலைவர் டாக்டர் இஷ்ரத்ஹுசெய்ன் கூறினர்.

டாக்டர் பாபா மேற்கொண்ட அணுசக்தி வேலைகள் உலக அணுசக்திப் படத்தில் இந்தியாவை வைத்தது மட்டுமின்றி, அணுசக்தித் தொழில் நுணுக்கத் திறனில் ஆசியர்களும் [illegible]மென உலகுக்கு நிரூபிப்பதாயிருந்தது. டாக்டர் பாபாவின் சோகமான திடுக்கிடும் முடிவு குறித்து பாகிஸ்தான் அணுசக்திக் கமிஷன் சார்பாக எங்களது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம் என்றும் அவர் கூறினர். ([illegible] ஸி.)

## ராக்கெட் பிரயாணம்

வாஷிங்டன், ஜன.28

1980-ம் ஆண்டில் ராக்கெட் போக்குவரத்து அமுலுக்குவருமென்றும் இதன்மூலம் விரைவில் பிரயாணிகள் உலகைச் சுற்றிவர முடியுமென்றும் அமெரிக்க விஞ்ஞானி கோடன் அறிவித்திருக்கிறார். பம்பாயிலிருந்து டோக்கியோ வழியாக அரைமணிநேரத்தில் லண்டனை அடையலாம். 7 அதிகப்படி நிமிஷங்களில் அமெரிக்காவையடையலாம். இதற்கான கூட்டு ராக்கெட்டுக்கள் அபிவிருத்திசெய்யப்பட்டிருக்கின்றன என்றும் அவர் கூறினர்.

## கேரளத்தில் ஆர்ப்பாட்டக்காரர் சேதம் விளைவித்தனர்

திருவனந்தபுரம், ஜன. 28

கேரளத்தில் உணவு வேட்டையை எதிர்த்து இன்று ராஜ்யத்தில் பல பகுதிகளிலும் ஹர்த்தால் நடைபெற்றது. திருவனந்தபுரம் கோழிக்கோடு, உட்பட பல நகரங்களில் காலையில் ஹர்த்தால் அமைதியாக நடைபெற்றதாயினும், பின்னர் வன்முறைச் செயல்களில் ஆர்ப்பாட்டக்காரர் ஈடுபட்டனர். இதன் பயனாக பல வர்த்தகஸ்தாபனங்கள் அரசாங்க அலுவலகங்கள் ஆகியவற்றுக்கு பலத்த சேதம் விளைவிக்கப்பட்டது.

பல இடங்களில் புகையிரத பாதைகளுக்கு தடை விதிக்கப்பட்டதால் புகையிரதப் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. எர்ணுகுளத்தில் பத்திரிகைக் காரியாலயம் ஒன்றையும் ஆர்ப்பாட்டக்காரர் தாக்கினர். காரியாலயத்தின் தந்தித் தொடர்பு துண்டிக்கப்பட்டது.

கோழிக்கோட்டில் சிற்

(6-ம் பக்கம் பார்க்க)

## மாற்றம் பெற்ற தலைமை ஆசிரியர் வழக்குத் தொடர முயற்சி

நல்லூர், சனி

கல்விஇலாகாவுக்கு எதிராக இடமாற்ற உத்தரவு பெற்றுள்ள தலைமையாசிரியர்கள் பலர் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய முடிவுசெய்துள்ளனர்.

ஜனவரி மாத முற்பகுதியில் வட இலங்கையிலிருந்து தென்னிலங்கைக்கு மாற்றம்பெற்றுச் சென்ற சுமார் 300 ஆசிரியர்களுள் பல தலைமையாசிரியர்களும் இடம்பெற்றுள்ளனர்.

ஆசிரியர் இடமாற்றம் சம்பந்தமாக ஆரம்பத்தில் பல எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாயினும் அவை பிற்பகுதியில் கைவிடப்பட்டன. ஆசிரியர் சங்கம் கல்வி இலாகாவுக்கு எதிராக வழக்குத் தொடர முயற்சிகள் செய்ததாயினும் சட்ட நிபுணர்களின் ஆலோசனைப்படி அந்த முயற்சி கைவிடப்பட்டது.

ஆனல் தலைமையாசிரியர்களைப் பொறுத்தவரையில் கல்விஇலாகாவுக்கு எதிராக அவர்கள் தனிப்பட்டமுறையில் வழக்கு தாக்கல்செய்யலாம் எனச் சட்ட நிபுணர்கள் ஆலோசனை தெரிவித்துள்ளனராம்.

சட்டநிபுணர்களின் இந்த ஆலோசனைப்படி உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்குப் பல தலைமையாசிரியர்கள் முன்வந்துள்ளதுடன் இதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுமுள்ளனர். வெளியிடங்களில் பதவிஏற்றுள்ள இத்தலைமையாசிரியர்களிற் பலர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வதற்கான முயற்சிகளுக்கு முன்னேடியாக உயர்நீதிமன்றத்தில் 3000 ரூபா டிபாசிட் கட்டி மனு ஒன்றினைத் தாக்கல் செய்யவிருக்கிறார்கள். இது சம்பந்தமாக அடுத்த வாரத்தில் ஆரம்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

—

அடிலெய்ட், ஜன 28

இங்கிலாந்துக்கும் ஆஸ்திரேலியாவுக்குமிடையே இன்று ஆரம்பமான 42-வது கிரிக்கெட்டெஸ்டில் இங்கிலாந்து 9 விக்கெட்க் நஷ்டத்திற்கு 222 ரன்கள் எடுத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

சாதாரணமாக நமது பிரார்த்தனை உதட்டளவில் தானுள்ளது. அது இதயபூர்வமான பிரார்த்தனை அபூர்வம். அவ்வித பிரார்த்தனைதாம் நமது உள்ளத்தைச் சுத்திசெய்யவும், இறைஅருள் கிடைக்கவும் உதவும்.

— மகாத்மாகாந்தி


# ஈழநாடு

EELA NADU, National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna: Phone: 319

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு தை மீ 16ஆ (29-1-66)


## இலங்கை-இந்திய நட்புறவு

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையேயுள்ள நெருங்கிய தொடர்பையும், நட்புறவையும் மேன்மேலும் வளர்க்கத் தாம் வேணவாக் கொண்டிருப்பதாக இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி இலங்கைப் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவுக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் தெரிவித்திருக்கிறார். சர்வதேசவிவகாரங்களிலும், பிரச்னைகளிலும் இலங்கைப்பிரதமருடன் சேர்ந்து பாடுபடும் சந்தர்ப்பத்தை தாம் ஆவலோடு எதிர்பார்த்திருப்பதாயும் திருமதி இந்திரா தமதுகடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் பொதுவான பிரச்னைகள் பலவுள. இருநாடுகளுமே கோஷ்டிசேரா நடுநிலைமைக் கொள்கையையே தங்கள் வெளிவிவகாரக் கொள்கையாகக் கடைப்பிடித்துவருகின்றன. இருநாடுகளும் ஒரேகாலத்தில்தான் அந்நிய ஆதிக்கத்தின் பிடியிலிருந்து விடுதலைபெற்றன. இலங்கையின் விடுதலைக்கு வழிகாட்டியது இந்தியாவே. சமயம், கலை, கலாச்சாரத் துறைகளிலும் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் நெருங்கிய உறவும் தொடர்பும் உண்டு. இருநாடுகளுக்கிடையிலும் நட்புறவும் நல்லெண்ணமும் நிலவினால்தான் தங்களுக்கு ஏற்படக்கூடிய நெருக்கடிகளையும் ஆபத்துக்களையும் சமாளிக்க முடியும். இருநாடுகளுக்கிடையிலும் இருந்துவந்த நல்லுறவு சென்ற சில வருடங்களில் சிறிது சீர்கெட்டிருந்ததென்பது உண்மை. இந்த நிலை மோசமாகாமல் இருநாடுகளின் நல்லுறவையும் பேணிப்பாதுகாக்க இருநாட்டுத் தலைவர்களும் முயற்சிசெய்தனர். அந்த முயற்சி தோல்வியடையவில்லை. இருநாட்டுத் தலைவர்களும் காட்டிய நல்லெண்ணத்தின் விளைவுதான் சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தம் என்றுசொல்லலாம்.

அண்டை நாடுகளுடன் நட்புறவுடன் வாழவேண்டுமென்பதேஇந்தியாவினதும் இலங்கையினதும் பொதுவான கொள்கையாதலால் இருநாடுகளுக்கிடையிலும் நல்லெண்ணத்தையும் நட்புறவையும் வளர்த்து இருநாடுகளின் பூரண ஒத்துழைப்புடன் இப்பகுதியில் பசியும் பஞ்சமும் நீங்கிமுன்னேற்றம்பெற வாய்ப்பு ஏற்படுத்துவது கஷ்டமல்ல. இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி, இலங்கைப்பிரதமருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ள நல்லெண்ணம் இந்த வாய்ப்பை அதிகரிப்பதாகும். பொதுப்பிரச்னைகளில் இலங்கையும் இந்தியாவும் நெருங்கி ஒத்துழைப்பதற்கு இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலுள்ள இலங்கைவாழ் இந்தியவம்சாவழியினர் பிரச்னை முற்றாகத் தீர்க்கப்பட வேண்டும். சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் இப் பிரச்னைக்கு ஒரு தீர்வு காண்பதற்கு வழிவகுத்துள்ளதாயினும், அந்த ஒப்பந்தத்தை விரைவில் அமுல் நடத்துவதில் தான் அப்பிரச்னை முற்றாகத் தீரமுடியும். இந்தஒப்பந்தத்தைஅமுல் நடத்துவதற்கு அவசியமான புதிய சட்டங்களை அரசாங்கம் விரைவில் கொண்டுவந்து நிறைவேற்றவேண்டும்.

முன்னையஅரசாங்கங்கள் காட்டிய வழியைப் பின்பற்றி, அவசரகாலநிலை அமுலில் இருக்கையிலேயே அவசியமான சட்டங்களை அரசாங்கம் கொண்டுவந்து நிறைவேற்றவேண்டும். பிரச்னைகள் தீர்ந்து, நாட்டில் அமைதியும் சமாதானமும், நிலவி, நாடுமுன்னேற வேண்டுமென்பதே மக்களின் விருப்பம். இந்திய வம்சாவழியினர் சம்பந்தமாக திருமதி சிறிமாபண்டாரநாயக்காவே இந்த ஒப்பந்தத்தைச் செய்துகொண்டதால், அதை அடிப்படையாகவைத்து, கொண்டு வரப்படும் சட்டத்தைஎதிர்ப்பதற்கு அவருக்கு நியாயமில்லை. அவர் தமது ஒத்துழைப்பை இவ்விஷயத்தில் அளித்தால் அவருக்கும் நல்லது; நாட்டுக்கும் நல்லது. இப்பிரச்னை தீர்ந்தால் இலங்கை-இந்திய நட்புறவு வளர்ந்து, இருநாடுகளும் சுபிட்சப் பாதையில் செல்ல வாய்ப்பு ஏற்படும்.

## சிப்பந்திகள் சம்பளம்

‘வர்த்தர்கள், என்ற முறையில் தேசியஅரசாங்கத்துக்கு உதவிபுரியவும், நாட்டின் பொருளாதார விருத்திக்கு உதவவும் எமது ஊழியர்களை நல்ல முறையில் நடத்துவதுடன் பொதுமக்களின் நம்பிக்கையையும் தேடவேண்டும்’ என்று சிங்கள வர்த்தக மண்டலக் காரியதரிசி திரு. ஆர்தர் பெரேரா, பிரதமருக்கு ஒழுங்கு செய்யப்பட்ட விருந்துபசாரமொன்றில் பேசுகையில் சரியாகச் சுட்டிக்காட்டினார்.

அரசாங்கத்துக்கும்நாட்டின் பொருளாதார விருத்திக்கும் மட்டுமல்லாது வர்த்தகர்களினது சொந்த நன்மைக்கும், அவர்கள் தங்களது ஊழியர்களை நல்லமுறையில் நடத்த வேண்டியதுடன் பொதுமக்களின் நம்பிக்கையையும் பெறவேண்டும். ஊழியர்களின் விசுவாசமும், உழைப்பும், பொதுமக்களின் நம்பிக்கையும் இல்லாது எந்த வர்த்தகமும் விருத்தியடையமுடியாது, வர்த்தகரும் முன்னேற முடியாது.

பல்வேறு தொழில்களிலீடுபட்டுள்ளவர்களுக்கும் இன்று சம்பள விகிதம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் முதலாளிமார் சம்மேளனப் பிரதிநிதிகளும் அங்கம் வகிக்கும் சம்பள நிர்ணய சபையும் இயங்குகின்றது. என்றாலும் சகல தொழிலிலும் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் அனைவரும் இதனால் பயன் பெறுகின்றனரென்று சொல்லிவிடமுடியாது.

உணவுச்சாலைகளிலும், கடைகளிலும் வேலைசெய்யும் ஊழியர்களுக்கென சம்பள விகிதம் நிர்ணயிக்கப்படவிருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது. ஓய்வு நேரமின்றியும் வேலைக்கேற்ற வேதனமின்றியும் காலையிலிருந்து இரவுவரை கஷ்டப்பட்டுவேலை செய்யும் உணவுச்சாலை, பலசரக்குக்கடை ஊழியர்களுக்கு இது பெரும் ஆறுதலளிக்கும். வர்த்தகர்களிலும்; உணவுச்சாலை அதிபர்களிலும் நல்லவர்கள் பலர் உள்ளனர். தங்கள் ஊழியர்களைச் சிறந்த முறையில் கவனிப்பவர்கள் இருக்கிறார்கள் என்பதும் உண்மையே. என்றாலும் கஷ்டப்படும் ஊழியர்கள் நிலைமாறவும் வர்த்தகம் விருத்தியாகி நாட்டின் பொருளாதாரம் முன்னேறவும் சகல ஊழியர்களுக்கும் சம்பள விகிதம் நிர்ணயிக்கப்பட வேண்டியதும் தொழிலா[illegible] வேண்டியதும் அவசியமாகும்.

## உத்தரவை நிறைவேற்ற பொலிஸ் அதிபர் தவறினரா?

பம்பலப்பிட்டி, வெள்ளி

ஜனவரிமாதம் 8-ந் திகதி பொலிஸ் அதிகாரிக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள்பற்றி மேலிடத்திலிருந்து இடப்பட்ட கட்டளைகள் நிறைவேற்றப்பட்டனதா? அத்துடன் அக்கட்டளைகள் செயற்படுத்தப்பட்டனவா என்பதையும் அக்கட்டளைகள் நடைமுறைக்குக் கொண்டுவரப்படாதிருந்தால் அக்கட்டளைகள் செய்யத் தவறியவர்கள் யார் என்பதையும் விபரமாகவும்தெளிவாகவும் ஆராய அரசாங்கம் ஒரு கமிட்டியை நியமித்துள்ளது.

அக்கமிட்டிக்கு நிரந்தரக் காரிசிகள் மூவர் நியமிக்கப்பட்டுள்ளார்கள். திருவாளர்கள் எம். ராஜேந்திரா, டி. ஜே. ஆர். குணவர்த்தன, எஸ். ஜே. வல்பிற்ற ஆகியோர் இக்கமிட்டியில் அங்கம் வகிக்கின்றனர்.

கீழ்க்குறிப்பிட்டுள்ள விஷயங்கள்பற்றிவிபரமாக ஆராயும்படி அரசாங்கம் இக்கமிட்டியைப் பணித்துள்ளது.

ஜனவரி 8-ந் திகதி ஒழுங்கையும் சட்டத்தையும் நிலைநாட்ட எவ்வித முறைகள் கையாளப்பட்டன. அத்துடன் கொள்ளுப்பிட்டியில் நடைபெற்ற சம்பவங்களுக்கான காரணங்கள், ஜனப்பிரதிநிதிகள் சபையில் ஜனவரி 8-ந் திகதி அரசாங்கத்தினால் கொண்டுவரப்படவிருந்த தமிழ்மொழி சட்டவிதிகள்பற்றி ஜனவரிமாதம்8-ந் திகதி காலை 6 மணிக்கு முன்னர் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த இரகசியப் பொலிசாருக்கு எந்த அடிப்படையில் தகவல்கள் கிடைத்தன. அத்துடன் எவ்விதம் இவர்களுக்கு இத்தகவல்கள் கிடைத்தன.

இப்படியாக கிடைக்கப்பட்ட தகவல்கள் பொலிஸ் அதிகாரியின் கவனத்திற்கு உரிய காலத்தில் கொண்டுவரப்பட்டனவா அல்லது பொலிஸ் அதிகாரியின் கவனத்திற்கு கொண்டுவராமல் விடப்பட்டனவா? அப்படியாயின் அதற்குப் பொறுப்பாயிருந்தவர்கள் யார்? எவ்விதமான தகவல்கள் பொலிஸ் அதிகாரியின் கவனத்திற்குக் கொண்டுவராமல் விடப்பட்டன. இத்தகவல்கள் உரியவரின் கவனத்திற்கு கொண்டுவரத் தவறியதன் காரணமாகத்தான் 8-ந் திகதி சம்பவங்கள் இடம்பெற்றனவா?

பொலிஸ் அதிகாரிக்கு விசேஷ உத்தரவுகள் ஏதும் மேலிடத்திலிருந்து கொடுக்கப்பட்டனவா?

ஜனவரி 8-ந் திகதி சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட என்னவகையில் பயனளிக்கக்கூடிய பாதுகாப்பைப் பொலிஸ் அதிகாரி செய்திருந்தார்.

பொலிஸ் அதிகாரியினால் இடப்பட்ட கட்டளைகளைப் பொறுப்பான முறையிற் செயற்படுத்த அவரது உதவி அதிகாரிகள் திருப்திகரமான முறையில் ஏதும் நடவடிக்கைகள் எடுத்து தெளிவாக அவர்களும் தங்களுக்குக்கீழ் வேலை செய்பவர்களுக்கு உத்தரவுகள் கொடுத்திருந்தார்களா? அப்படிச் செய்திருந்தால் அந்த உத்தரவுகள் ஏன் செயற்படுத்தப்படவில்லை?

உயர் அதிகாரிகளினால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள் ஏதும் கவனியாதுவிடப்பட்டனவா? அப்படியாயின் அதற்குப் பொறுப்பானவர்கள் யார்?

ஜனவரி 8-ந் திகதி காலை 6 மணிக்குப்பின்னர் என்ன விதமான தகவல்கள் இரகசியப் பகுதிகளிலிருந்து பொலிஸ் பகுதிக்குக்கிடைத்திருந்தன? கொழும்பில்8-ந் திகதி நடைபெறவிருந்த ஆர்ப்பாட்டம்பற்றிப் பொலிசார் எத்தகைய தகவல்களை யார் யாரிடமிருந்து பெற்றிருந்தார்கள்?

உரியகாலத்தில் இத்தகவல்கள்யாவும் பொலிஸ்அதிபரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டனவா? அல்லது அத்தியாவசியமான தகவல்கள் அவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லையா? அப்படியாயின் அதற்குக் காரணமாயிருந்தவர் யார்? எத்தகைய தகவல் பொலிஸ் அதிபரின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை.

ஜனவரி 8-ந் திகதி நடைபெற்ற சம்பவங்களையிட்டு பொலிஸ் அதிபரினால் எவ்வித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இச்சம்பவங்களையிட்டு வேறு ஏதாவதுவிசேஷமான காரணங்கள் உண்டா?

ஆசிரியருக்குக் கடிதம்

## ஏன் பாராமுகம்?

யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் சார்பில் 1965-ம் ஆண்டு செப்டம்பர்மாதம் தொடக்கம் இன்றுவரை 18 வயதுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கும் அரைக் கட்டண பஸ் சீசன் டிக்கட் கோரிப் பல கடிதங்கள் இ. போ. ச. தலைமைஅலுவலகத்திற்கும், யாழ். இ. போ. ச. பிரதேச கிளைக்கும் அனுப்பிவைக்கப்பட்டும் இவ்விடயத்தில் அவர்கள் பாராமுகமாகவே இருந்துவருகிறார்கள். ஏனைய அரசாங்கக் கல்லூரிகளில் பல்கலைக்கழக புகுமுக வகுப்பு படிக்கும் மாணவர் அனுபவிக்கும் இந்த அரைக் கட்டண பஸ் சீசன் டிக்கட் சலுகையை தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்கள் அனுபவிக்கக்கூடாதா? இதுவும் அரசாங்கக் கல்லூரி தானே? இதையிட்டு இ. போ. ச. வினர் கவனமெடுப்பார்களா?

க. பேரம்பலம்.
யாழ்ப்பாணம்.

# ஐயாறன் எழுதுகிறது

ஈழத்திலிருந்து வெளியாகும் ‘‘கலைச்செல்வி’’ எனும் மாஸிகையின் பொங்கல்மலரைப் பார்த்தேன். இலக்கியச்சுவை சொட்டும் அந்த உயர்ந்த சஞ்சிகை ஈழத்துக்குப் பெருமையளிப்பதாகும். அப்பத்திரிகை வாழ்க!

இரசிகமணி கனக. செந்திநாதன் ‘‘எனது நூல்நிலயம்’’ என்றதலைப்புடன்எழுதியுள்ள அனுபவக் கட்டுரை மிக ருசியாக உள்ளது. கடைசியாக அவர் ஒரு பயனுள்ள எச்சரிக்கை செய்கிறார் அவரது நூல்நிலையத்திலிருந்து பல அரிய நூல்களைப் படிக்க வாங்கிச் சென்றவர்கள் திருப்பிக் கொடுக்கவில்லையாம்.

அதனால் ‘‘கவனம், காசு வேண்டுமென்றால் கைமாற்றுக் கொடுங்கள். கவனமாகப் பேணும் நல்ல நூல்களை யார் கேட்டாலும் கொடாதீர்கள். இது என் அனுபவம். என் அனுபவம் மாத்திரமா? நூல்நிலையம் வைத்திருக்கும் எல்லோர் அனுபவமும்தான்!’’ என்கிறார்.

வடமொழியிலே ஒரு முதுமொழியுண்டு. ‘‘புஸ்தகம், வனிதா, வித்தம் பரஹஸ்தம் கதம் கதம்’’ அதாவது புத்தகம், பெண், அல்லது பணம் பிறர் கைக்குச் சென்றுவிட்டால் அது போனது போனதுதானாம்!

ஃ ஃ ஃ

அன்று டாக்டர் பாபாவின் விமானவிபத்தைப் பற்றி எழுதினேனல்லவா? சில அன்பர்கள் அதைப் பாராட்டினர். ஓரன்பர், விமானவிபத்துக்கும், புதிய பிரதமரின் தெய்வ நம்பிக்கை இன்மைக்கும் முடிச்சுப் போட்டுவிட்டது சரியல்லவென்றும், தெய்வம் கருணையுள்ளதென்றும், யாரையும் தண்டிக்கமாட்டாதென்றும் தெரிவித்தார்.

பீகாரில் ஏற்பட்ட பயங்கர பூகம்பத்தைப்பற்றி மகாத்மாகாந்தி எழுதியது நினைவுவந்ததாலே அப்படிக் குறிப்பிட்டிருந்தேன். ‘‘ஒவ்வொரு விபத்துக்கும் அடிப்படையில் தெய்வீக காரணம் ஒன்றிருக்க வேண்டும். அவனன்றி ஓரணுவும் அசையாது. பஞ்சம், வெள்ளம், பூகம்பம் போன்றவை ஏதோ இயற்கை சம்பவங்களாகத் தோன்றினும், என்னைப் பொறுத்தவரை, அவற்றை, ஏதோ குருட்டுச் சக்திகளின் விபரீத விளையாட்டாக நான் கொள்ளவில்லை. கடவுளின் சட்டவிவரங்களெல்லாம் நாமறியோம். மிகப்பெரிய விஞ்ஞானி, அல்லது மெஞ்ஞானியின் அறிவும் கடவுளுக்குமுன் ஒரு துரும்பு போலாகும். தீண்டாமை எனும் நமது பாபத்தின் பலனாகவே பீகார் பூகம்பம் ஏற்பட்டிருக்க வேண்டுமென்றும், நம்மைத் திருத்தி புனிதப்படுத்துவதே இவ்வித விபத்துக்களின் நோக்கமாகுமென்றும் நான் நம்புகிறேன்....’’ என்று குறிப்பிட்டிருக்கிறார்.

ஃ ஃ ஃ

உரும்பிராயில் பாம்புகள் அதிகமாக இருந்ததையும், அத்தொல்லை எப்படி நீங்கப் பெற்றதென்பதைப் பற்றியும் குறிப்பிட்டது குறித்து வட்டுக்கோட்டையிலிருந்து ஓரன்பர் தமது அனுபவத்தை எழுதுகிறார்:

‘‘1931ம் ஆண்டில் மட்டக்களப்புப் புகையிரதப் பாதையிலே கெக்கிறாவை நிலையத்தில் உதவி அதிப

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜாஜிக்கு சாஸ்திரி எழுதிய கடிதம்

## கையெழுத்திடாத நிலையில் ஒப்படைக்கப்பட்டது

சென்னை, ஜன. 28

டாஷ்கண்ட் ஒப்பந்தம் கைச்சாத்தான பின், காலஞ்சென்ற பிரதமர் திரு. சாஸ்திரி, ராஜாஜிக்கு எழுதிய கையெழுத்திடாத கடிதம், ராஜாஜியிடம் சேர்ப்பிக்கப்பட்டது.

''டாஷ்கண்டில் நாங்கள் செய்த முடிவை ஏற்பீர்கள் என்றும் அதற்கு முழு ஆதரவு அளிப்பீர்கள் என்றும் நம்புகிறேன்'' என சாஸ்திரி கூறியதற்கிணங்க கடிதம் எழுதப்பட்டது. ஆனால் கையெழுத்திடுமுன் அவர் காலமாகிவிட்டார். கடிதத்தை பிரதமரின் காரியதரிசி திரு. ஸி. என். ஜா ராஜாஜியிடம் சேர்ப்பித்தார். கடிதம் சென்ற 14-ம் திகதி ஒப்படைக்கப்பட்டது.

'டிசம்பர் 27-ம் திகதி ராஜாஜி, திரு. சாஸ்திரிக்கு எழுதிய கடிதத்தில் காஷ்மீர் பற்றிக் குறிப்பிட்டு, தாம் 'சுயராஜ்யா' பத்திரிகையில் எழுதிய கட்டுரை ஒன்றையும் இணைத்திருந்தார்.

டாஷ்கண்ட்பேச்சில் காஷ்மீர் இடம்பெறக்கூடாது என ராஜாஜி தன் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

திரு. சாஸ்திரியின் பதிலில் ராஜாஜியின் கட்டுரையைத் தாம் படித்ததாயும், டாஷ்கண்ட் பிரகடனம் ராஜாஜிக்கு திருப்தியளிக்கும் என நம்புவதாயும் குறிப்பிட்டிருந்தார்.

(பி.டி.ஐ.)

# வடவியட்னும்மீது குண்டுவீச்சு மீண்டும் ஆரம்பமாகலாம்

## ஐ. நா. வட்டாரங்கள் கவலை

நியுயோர்க், ஜன. 28

கடந்த ஒருமாத காலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த குண்டுவீச்சு, வடக்கு வியட்னமில் மீண்டும் ஆரம்பிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குண்டுவீச்சை மீண்டும் தொடங்குவதற்கான அறிகுறிகள் தென்படுவதாகக் கூறப்படுகிறது.

வடக்கு வியட்னமில் மீண்டும் குண்டுவீச்சை அமெரிக்கா ஆரம்பிப்பது குறித்து ஐக்கிய நாடுகள் வட்டாரங்களில் கவலை தெரிவிக்கப்பட்டது. வியட்னும் நெருக்கடி சுமுகமாகத் தீரும் இக்கட்டத்தில் வடக்கு வியட்னமில் அமெரிக்கா மீண்டும் குண்டுவீச்சை ஆரம்பிப்பது கவலையளிக்கும் விஷயம் என்று இங்குள்ள பார்வையாளர்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

### ஜோன்ஸன் ஆலோசனை

இதற்கிடையே அமெரிக்க அதிபர் திரு. லின்டன் ஜோன்ஸன் தமது ஆலோசகர்களுடன் தீவிரமாகப் பேச்சுக்கள் நடத்தி வருகின்றார்கள். ஆனால் வடக்கு வியட்னமில் மீண்டும்குண்டு வீச்சை ஆரம்பிப்பது குறித்து ஜனாதிபதி ஜோன்ஜன் இன்னும் முடிவு செய்யவில்லை.

### டீன்ரஸ்க் கருத்து

அமெரிக்க வெளியுறவுமந்திரி திரு. டீன்ரஸ்க் நேற்று தெரிவிக்கையில், படைபலத்தைபடைபலம்மூலம்தான் சமாளிக்கமுடியுமென்றும் அதுஇல்லாவிடில் சரண் புகுவது அல்லது தோல்வியை ஒப்புக்கொள்வதுதான் ஒருவழிஎன்றும் கூறினர்.

# அமெரிக்க ஜனநாயக கட்சியில் கருத்து வேற்றுமை

## வடவியட்னும் மீது குண்டு வீச்சு கூடாது எனச்சிலர் வற்புறுத்து

வாஷிங்டன், ஜன. 28

வடவியட்னும் மீது மீண்டும் குண்டு வீச்சை ஆரம்பிப்பது குறித்து அமெரிக்க ஜனநாயகக் கட்சியில் கருத்து வேற்றுமை ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

குண்டுவீச்சை ஆரம்பிப்பதை எதிர்த்து பல எம். பி. க்கள் ஜனாதிபதி ஜோன்ஸனுக்கு வற்புறுத்த முயற்சித்திருக்கிருர்கள்.

ஜனாதிபதி இதுசம்பந்தமான ராஜதந்திர, ராணுவ அம்சங்களை இன்னும் ஆராந்து வருகிருர் என்றும், முடிவு எதையும் அவர் மேற்கொள்ள சில காலம் பிடிக்கும் என்றும், ஆனால் இதற்குத் தாமதம் எதுவும் ஏற்படாது என்றும்வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் கூறினர்.

பிரபல அமெரிக்க செனட்டர் ஜோன் மன்ஸ்பீல்ட் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில், வியட்னமில் நிலைமை மோசமாய் இருப்பதாயும், பேச்சுவார்த்தைக்கான சந்தர்ப்பம் வெகு தொலைவில் இருக்கிறது என்றும் கூறியுள்ளார்.

இதற்கிடையில் கம்போடிய எல்லையில் வியட்காங் அணியில் சேரப் பயிற்சி பெற்று வந்த 100 பேர் சிறைப்பிடிக்கப் பட்டார்கள் என்றும், இங்கு ஏற்பட்ட கைகலப்பில் 14 கொரில்லாக்கள் கொல்லப்பட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

தென் வியட்னும் பிரதமர் மார்ஷல் கை நேற்று சைகோன் வீதிவழியாக நடந்து சென்று, தமக்கு எவ்வித அபாயமும் ஏற்படவில்லை என்பதை மக்களுக்குக் காட்டினர். திரு. கை சுட்டுக் காயப்படுத்தப்பட்டார் என்ற வதந்தியைப் பொய்ப்பிக்கு முகமாகவே அவர் நடந்து சென்ருர்.

வடவியட்னும்மீது குண்டுவீச்சு நிறுத்தப்பட்டிருக்கும் காலத்தை மேலும் நீடிக்கத் தாம் தொடர்ந்து முயற்சிப்பதாய் ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் கூறியிருக்கிருர்.

# கேரள உணவு நெருக்கடியை தீர்க்க துரித நடவடிக்கை

## பல ராஜ்யங்கள் அரிசியை அனுப்பிவருகின்றன

### ரேஷன் அதிகரிப்பு போதாது என கம்யூனிஸ்டுகள் அதிருப்தி

திருவனந்தபுரம், ஜன.28

கேரளத்தில் ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடியைச் சமாளிக்கும் பொருட்டு இங்கு பல ராஜ்யங்களிலிருந்தும் ஏராளமான உணவுப் பொருள்கள் விரைந்து அனுப்பப்பட்டு வருகின்றன.

இம்மாதம் ஆந்திரப் பிரதேசம் கேரளத்துக்கு வாக்குறுதி அளித்திருக்கும் 35,000 டன் அரிசியில் ஏற்கெனவே 30,000 டன்வந்து சேர்ந்திருக்கிறது.

தமிழ்நாடு வாக்குறுதி அளித்திருக்கும் 30,000டன் அரிசியில் 10,000டன் அனுப்பப்பட்டிருக்கிறது.

ஒரிஸ்ஸாராஜயம் 15,000 டன் இம் மாதம் சப்ளை செய்ய இணங்கியிருக்கிறது. இதில்1,000டன் ஏற்கனவே அனுப்பப்பட்டுவிட்டது.

மத்திய அரசாங்கம் தனக்கு 2 லட்சம் டன் கோதுமையும், இதர தானியங்களும் தந்தால் அந்த அளவான அரிசியை கேரளத்துக்கு அனுப்பத் தயாராய் இருப்பதாக ஆந்திரப் பிரதேசம் அறிவித்திருக்கிறது.

அதேசமயம் வருகிற 30-ந் திகதி முதல் கேரளத்தில் அரிசி ரேஷன் 120 கிராமிலிருந்து 140கிராமாக உயர்த்தப்படுமென பிரதம மந்திரி ஸ்ரீமதி இந்திராகாந்தி அறிவித்திருக்கிருர். அடுத்த மாதம் நிலைமை மறு பரிசீலனை செய்யப்படுமென்றும், கேரள உணவு நெருக்கடியைத் தீர்க்க ஆவன செய்யப்படுமென்றும் பிரதமர் வாக்குறுதியளித்திருக்கிருர்.

பிரதம மந்திரியின் அறிவிப்பை பிரதேச கவர்னர் திரு. ஏ. பி. ஜெயின் வரவேற்ருர்

பிரதம மந்திரி மக்களின் சிரமத்தைத்தீர்க்க முயற்சி எடுத்து வருகிருர் என்றும், நிலைமையைச் சமாளிக்க அவருக்கு அவகாசம் கொடுக்கவேண்டுமென்றும் பிரதேச காங்கிரஸ்தலைவர் திரு ஸி. கே. ஆப்ரஹாம் கூறினர்.

ஆனல் இந்த ரேஷன் உணவு போதுமானதல்ல வென்றும், குறைந்தது 12 அவுன் ஸ்தேவையென்றும் வலதுசாரி கம்யூனிஸ்ட் தலைவர் திரு. கோவிந்தமேனன் கூறினர். இந்நிலையில் அரசியல் கட்சிகளும், தொழிற் சங்கங்களும் இன்று நடத்த இருந்த ஹர்தாலை நிறுத்த அவசியம் எதுவும் இல்லை என்றும் மேலும் அவர் தெரிவித்திருக்கிருர்.

# ஆயுதப் பரிகரண மகாநாடு

ஜெனிவா, ஜன. 28

4 மாத இடைவெளிக்குப் பின் நேற்று 17 தேச ஆயுதப் பரிகரண மகாநாடு ஜெனிவாவில் கூடியது.

மகாநாடு ஆக்கமுறையில் செயலாற்ற வாழ்த்துத் தெரிவித்து பாப்பரசர் பால், யுதாண்ட். ஜனதிபதி ஜோன்ஸன், பிரிட்டிஷ் பிரதமர் வில்ஸன் ஆகியோர் வாழ்த்துக்களை அனுப்பியிருந்தனர்.

அணுஆயுத ஒழிப்பு சம்பந்தமாக 7 அம்சத் திட்டமொன்றை அமெரிக்கா மகாநாட்டில் சமர்ப்பித்தது.

ரஷ்யப் பிரதிநிதி பேசுகையில் வியட்னமிலும், டொமினிக்கனிலும் அமெரிக்கா கடைப்பிடிக்கும் கொள்கைகளை வன்மையாகக் கண்டித்தார்.

காலஞ்சென்ற திரு. சாஸ்திரி, அணுவிஞ்ஞானி டாக்டர் பாபா, நைஜிரியப் பிரதமர் திரு. பலேவா ஆகியோருக்குப் புகழுரை தெரிவிக்கப்பட்டபின் மகாநாடு இதர அலுவல்களில் இறங்கியது.

# செய்தியில் வாயுவேகம்

லண்டன், ஜன. 28

செய்திகளை மிகத் துரிதமாக அனுப்பும் முறையொன்று நேற்று கையாளப்பட்டது. பாரிஸ் வழியாக அமெரிக்காவுக்கு நிமிஷம் ஒன்றுக்கு 1000 வார்த்தைகள்வீதம் அனுப்பப்பட்டன. இது டெலிபிரிண்டரின் வேகத்தைவிட 20மடங்கு அதிகமாகும்.

# உலகப் பெண்கள் வாழ்த்து

டோக்கியோ, ஜன. 28

75 லட்சம் அங்கத்தினர்களைக் கொண்ட சர்வதேச மாதர் ஸ்தாபனம் ஸ்ரீமதி இந்திரா காந்திக்கு அனுப்பியுள்ள செய்தியில் ''நீங்கள் பிரதமராய்த் தெரிவுசெய்யப்பட்டதைக் குறித்து உலகப் பெண்குலமே பெருமையடைகிறது'' எனக் கூறியிருக்கிருர்கள்.

# இங்கிலாந்து மோசமான ஆரம்பம்

அடிலெய்ட், ஜன. 28

இங்கிலாந்துக்கும், ஆஸ்திரேலியாவுக்கும் இடையே இன்று 4வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டி ஆரம்பமானது. இங்கிலாந்து துடுப்பெடுத்தாட ஆரம்பித்து விரைவில் 34 ரன்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்தது. பார்டர், பாஸ்காட், எட்ரிச் ஆகியோர் அவுட்டாகினர்கள்.

# புதிய கண்டுபிடிப்பு

மாஸ்கோ, ஜன. 28

கிழக்குப் அண்டார்ட்டிக்காவில் புதிய தீவு ஒன்றை ரஷ்ய ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்திருக்கிருர்கள், இத்தீவு 60 மைல் நீளமும், 30 மைல் அகலமும்கொண்டு விளங்குவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

### ஜெனரியான்-அக்னூர் அரங்கில்

# வெளியேறிய கிராமமக்கள் மீண்டும் திரும்புகின்றனர்

புதுடில்லி, ஜன. 28

ஜம்மு காஷ்மீரிலுள்ள ஜெனரியான் அக்னூர் அரங்கில் 40 கிராமங்களிலிருந்து வெளியேற்றப்பட்ட மக்கள், மீண்டும் தங்கள் இல்லங்களுக்குத் திரும்ப ஆரம்பித்திருக்கிருர்கள்.

இந்தோ-பாகிஸ்தான்சண்டையின் போது இவர்கள் தங்கள் கிராமங்களை விட்டு அப்புறப்படுத்தப் பட்டிருந்தார்கள். இப்போது டாஷ்கண்ட் பிரகடனத்தை அடுத்து ஏற்பட்ட இந்தோ—பாகிஸ்தான் தளபதிகளின் முடிவைத் தொடர்ந்து வெளியேறிய மக்கள் திரும்பவும் வருகின்றுர்கள்.

இந்தியா — பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளும் டாஷ்கண்ட் பிரகடனத்தை அமுல் நடத்திவரும் விதப் குறித்து சோவியத் பிரதமர் திரு. கோஸிஜின் மிகுந்த திருப்திதெரிவித்திருக்கிருர்.

மாஸ்கோவிலுள்ள இந்தியத்தூதர் திரு. கவுல் நேற்று திரு. கோஸிஜினைச் சந்தித்து ஒருமணி நேரம் பேசினர். பிரதமர் இந்திராகாந்தியின் கடிதம் ஒன்றையும் அவர் அப்போது திரு. கோஸிஜினிடம் கையளித்தார். அப்போதுதான் ரஷ்யப் பிரதமர் டாஷ்கண்ட பற்றித் திருப்தி தெரிவித்தார்.

லண்டனில் நடைபெற்ற குடியரசுதினவிருந்தில்பிரிட்டிஷ் பிரதமர் திரு வில்சன் பேசுகையில், பாரதத்துக்கும் பாகிஸ்தானுக்குமிடையே சமரசம் ஏற்படுவதை பிரிட்டன் மனப்பூர்வமாய் விரும்புவதாயும், டாஷ்கண்ட் பிரகடனத்தை மனப்பூர்வமாய் வரவேற்பதாயும் கூறினர்.

# சீனு தான் காரணம்

பாங்ஹாக், ஜன. 28

தாய்லந்து - கம்போடியா எல்லையில் சமீபத்தில் நடைபெற்ற கைகலப்புக்குச் சீனுதான் காரணமாயிருக்க வேண்டுமென தாய்லாந்து மந்திரி ஒருவர் கூறினர்.

# புதிய ரயில்பாதை

புதுடில்லி, ஜன. 28

வடகிழக்கு எல்லைப்புறப் பகுதியில் 30 மீட்டர் நீளம் 'மீட்டர்கேஜ்' ரயில்பாதை இன்று திறந்துவைக்கப்பட்டது. இதற்கு 5 கோடி ரூபாய் செலவிடப்பட்டது. அடர்ந்த காடுகள் வழியாக இப்பாதை செல்கின்றது.

# வாக்காளர் இடாப்பு பற்றி புகார்

வல்வெட்டித்துறை, வெள்ளி

வல்வெட்டித்துறையில் தற்பொழுது பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் தேர்தல் வாக்காளர் இடாப்பில் பலவாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டிருப்பதாகவும், வட்டாரம் மாறி வாக்காளர்கள் பெயர்கள் பதிந்திருப்பதாகவும் குறிப்பாக இப்படியான பெரும் பிழை 4-ம் வட்டாரத்திலே நடந்திருப்பதாகவும் வாக்காளர் மேலிடத்திற்குப் புகார் செய்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டாஷ்கண்ட் ஒப்பந்தம் ஒரு சாதனை

## மேனன் பாராட்டு

வடம்பாய், ஜன. 28 டாஷ்கண்ட் பிரகடனம் தேகிய நலன்களுக்கு அல்லது சுதந்திரத்திற்கு முரண்பாடானதல்ல என்றும், எனவே கட்சிகளும், மக்களும் அதை அமுல் செய்ய உதவிபுரியவேண்டும் என்றும் திரு. வி. கே. கிருஷ்ண மேனன் இங்கு பொதுக்கூட்டமொன்றில் கூறினார்.

வடபம்பாய் ஜுஹூ கடற்கரையில் குடியரசு தினக்கூட்டத்தில் அவர் பேசினார்.

''எந்த ஒப்பந்தத்திலும் பிழைகண்டுபிடிக்க முயன்றால், அப்படிச் செய்ய முடியும். அந்தவகையில் டாஷ்கண்ட் பிரகடனத்தைக்கூட குறைகூற முடியும். ஆனால் அடிப்படையில் அது தேசிய நலன்களுக்கு மாறானதல்ல'' என்றும் அவர் கூறினார்.

'டாஷ்கண்ட் உடன்பாடு ஓர் உடன்படிக்கையிலிருந்து மாறுபட்டது. போர்தவிர்ப்பு ஒப்பந்தத்தின் மற்றோர் முறையான ஏற்பாடு இது. இந்த ஒப்பத்தம் இந்தியாவின் எந்தப் பகுதியையும் எவருக்கும்விட்டுக்கொடுக்கவில்லை' என்றும் அவர் கூறினார்.

'கடந்த 18 ஆண்டுகளாக நீடித்துவந்த பிரகடனம் செய்யப்படாத யுத்தம் டாஷ்கண்ட் ஒப்பந்தத்தின் மூலம் முதல் தடவையாக முடிந்திருக்கிறது. சகஜ உறவை ஏற்படுத்தும் முயற்சி எல்லாப் பிற்போக்கையும்விட சாதனையான ஒரு விஷயம்' என்றும் கிருஷ்ண மேனன் குறிப்பிட்டார்.

பி. டி. ஐ.

## புதிய முறை

பருத்தித்துறை, வெள்ளி

பருத்தித்துறை வர்த்தக சங்கத்தினர் திரு. சி. இரத்தினசபாபதி தலைமையில் கூடிய பொழுது போயாவிடு முறை நாட்களில் கடைகளை திறந்து இந்துசமய அநுட்டானத்திற்காக வியாழக்கிழமைகளில் அரை நேரமும் வெள்ளிக்கிழமைகளில் முழுநேரமுமாக வியாபார ஸ்தலங்களை மூடுவதென முடிவுசெய்துள்ளனர்.

இத்தீர்மானம் பாராளுமன்ற உறுப்பினர்க்கும் தொழில் அமைச்சர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

## சனசமூக நிலைய செயற்குழு

யாழ்ப்பாணம், வெள்ளி

மல்லாகம் சனசமூகநிலைய பொதுக்கூட்டம் நிலையமண்டபத்தில் திரு. ஆ. சிவசப்பு தலைமையில் நடைபெற்றது. செயற்குழு விபரம் வருமாறு:—

தலைவர்: சிவ. சிறீதரன். உபதலைவர்: க. தர்மதேவன். செயலாளர். வே. இ. சிறீநடராசா. உப செயலாளர்: சு. விவேகானந்தன். பொருளாளர்: மு. நாகேந்திரசர்மா- உப பொருளாளர்: சே. நாகேந்திரம். நூல் நிலையப் பொறுப்பாளர்: க. அருளானந்தம். உதவி நூல் நிலையப்பொறுப்பாளர்: வ. இ. செகராசசிங்கம். நிர்வாகிகள்: இ. ஜே. செல்லப்பா, தி. இராசரத்தினம், சு, சுந்தரலிங்கம், மு. செல்லையா, வ. குமாரசாமி, சு. மகேசுவரன், வி. பாலகுமாரன், இ. நம. சிவப்பிரகாசம், கார்த்திகேசு, நந்திதேவன்.

## இராணுவத்தினரின் சேவை

பருத்தித்துறை, வெள்ளி

சிலதினங்களுக்கு முன் செம்பியன்பற்று என்னும் இடத்தில் ரோந்து செய்து கொண்ட இராணுவத்தின கடற்கரையோரமாகச் சென்றுகொண்டிருக்கையில், 131 பழையகாட்சாரம் கொண்ட ஒரு கட்டைக் கண்டெடுத்து பருத்தித்துறை சுங்க இலாகாவிடம் ஒப்படைத்துள்ளனர். இதுசம்பந்தமாக எவரும் கைது செய்யப்படவில்லை.


இந்தியாவில் பிரபல மருந்துகள் தயாரிப்பவர்களான "Radha Pharmaceutical Workes" அவர்களின் தொழில்நுட்பக் கூட்டுறவு அனுசரணையுடன் இலங்கையில் தயாரானது

"ராதா"

கிறைப் ரோனிக்

( Radha's Gripe Tonic )

குழந்தைகளின் வயிற்றுக் கோளாறுகளுக்கும், தாளாந்த உபயோகத்திற்கும், குழந்தைகளின் வளர்ச்சிக்கும் இன்றியமையாதது.

- நம்பிக்கையானது, சிறந்தது, கேடு விளைவிக்காதது
- ★ இறக்குமதியாகும் இதேமாதிரியான மருந்துகளுக்கு நிகரானது
- ★ புத்திசாலிகளான தாய்மார்கள் உபயோகிக்கிறார்கள்

இது ஒரு ''ராதா புறடக்ஸ்'' தயாரிப்பு

RADHA PRODUCTS

இந்த வியாபாரச் சின்னத்தைப் பார்த்து வாங்குங்கள்.

விலை ரூபா 2-00

வியாபாரிகளுக்கு கமிஷன் உண்டு.

இலங்கையில் ஏகவிநியோகஸ்தர்கள்:

எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

மருந்து, மருந்துச்சரக்கு, வாசனைதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த சில்லறை வியாபாரிகளும்

53, காங்கேசன்துறை வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம். போன்: 541, 7068

''பாலேந்திரா பில்டிங்'' 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.


## எம். பி. நடவடிக்கை

வல்வெட்டித்துறை, வெள்ளி

கெருடாவில், மயிலியதனை தொண்டமாறு ஆகிய இடங்களில் இம்முறை 50 ஏக்கருக்கு மேற்பட்ட நிலத்தில் வெங்காயச்சாகுபடி அமோகமாக விளைவைக் கொடுத்திருப்பதால் அதனை விவசாயிகளிடமிருந்து அந்தர் 34—72 சதப்படி கொள்வனவு செய்யுமாறு பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் வட பகுதிவிளைபொருள் உற்பத்தி நிலையத்தாருடன் பேசி ஒழுங்குகள் செய்துள்ளார்.

எம். பி. யின் வேண்டுகோளின்படி அநேக விவசாயிகள் வெங்காய உற்பத்தியில் ஈடுபட்டதாகத் தெரிய வருகிறது.

## பஸ்கள் தாமதம்: மாணவர் பாதிப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலைகளுக்குச் செல்லும் பாடசாலை மாணவர்கள் தங்கள் தங்கள் பாடசாலைகளுக்கு நேரத்திற்குச் செல்லமுடியாத நிலையில் கஷ்டப்படுகிறார்கள். பஸ் நேரத்திற்குக் கிடைக்காததே இதற்குக் காரணமாகும். தூர இடங்களிலிருந்து பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்கள் ஒவ்வொருநாளும் தங்கள் முதற் பாடங்களைத் தவறவிட வேண்டி ஏற்படுவதாக மேல் வகுப்பு மாணவர் ஒருவர் மிக வருத்தத்துடன் தெரிவித்தார். தேவையில்லாமலே பஸ்கள் ஒன்றன்பின் ஒன்றாக போட்டி போட்டுக் கொண்டு ஓடுகின்றனவென்றும் தேவையான நேரங்களில்போதியபஸ்கள் கிடைப்பதில்லையென்றும் தினசரி பஸ்பிரயாணி ஒருவர் அதிருப்தி தெரிவித்தார்.

ந. நி.

## 100 ரூபா அபராதம்

வல்வெட்டிதுறை, வெள்ளி

தொண்டமாறு கெருடாவிலைச் சேர்ந்தகுட்டியன் சின்னத்தம்பி, முத்தன் குட்டியன் ஆகியோர் அதே இடத்தைச் சேர்ந்த பொன்னன் கதிரமலைக்கு சென்ற வருடப் புரட்டாதி மாதம் 17-ம் திகதி கத்தியாலும் பொல்லாலும் தாக்கிக் காயம் விளைவித்ததாக வல்வெட்டித்துறைப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை நீதிபதி திரு. றொபேர்ட்சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணை முடிவில் நீதிபதி முதலாம் எதிரியான குட்டியன் சின்னத்தம்பிக்கு 100 ரூபாவும் இரண்டாம் எதிரியான முத்தன் குட்டியனுக்கு 75 ரூபா அபராதமும் விதித்துள்ளார்.

வல்வெட்டித்துறை பொலிஸ் சார்ஜன்ட் எம். பி. அமிர்தநாதன் வழக்கை நடத்தினார்.

## பிரயாணிகள் கஷ்டம்

யாழ்ப்பாணம், சனி

பருத்தித்துறை சங்கானை பஸ்சேவை கடந்த சில தினங்களாக குறிக்கப்பட்ட அட்டவணையின் பிரகாரம் சேவையில் ஈடுபடாததால் பிரயாணிகள் மிகவும் கஷ்டத்திற்குள்ளாக வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

மழை காலங்களில் இப்பாதையில் செல்லும் பஸ்கள் குறிக்கப்பட்ட இடத்தைச் சென்றடைவதில்லை [illegible] விட்டதெனவும் தெரியவருகிறது.

# வாலிபர் முன்னணிகள் தேர்தல் காலத்துடன் முடியக்கூடாது

## சாவகச்சேரிக் கூட்டத்தில் பேச்சு

மீசாலை, வெள்ளி

சாவகச்சேரி வடக்கு வாலிபமுன்னணியின்விசேட கூட்டம் திரு. கே. சிற்றம்பலம் தலைமையின் கீழ் நடைபெற்றது.

சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையின் சீர்கேடான நிலைமை பற்றியும் தென்மராட்சிப்பகுதியில் கல்வித் தரக்குறைவு பற்றியும், நிர்வாகக் குறைகள் பற்றியும். விசேட பஸ் சேவைகள் பற்றியும் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

தலைவர் திரு. கே. திருச்சிற்றம்பலம், வைத்தியசாலை மிகவும் சீர்கேடான நிலையில் இருப்பதாகவும் அங்கு ஒரு சிலரே தமது கடமைகளைச் சரிவரச்செய்வதாகவும் கூறினார். ஆஸ்பத்திரியின் நிலைபற்றி திரு. வி. சிவப்பிரகாசம், சாவகச்சேரிப் பட்டினசபை 5-ம் வட்டார அங்கத்தவர் திரு. மு. விநாசித்தம்பி ஆகியோரும் பேசினர்.

பஸ்சேவை பற்றி விவாதிக்கப்பட்டபோது கல்லூரி மாணவர்களுக்காக கொடிகாமத்திலிருந்து யாழ்ப்பாணப் பகுதிக்குச் செல்லும் பஸ் சேவை — யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள எல்லாப் பாடசாலைகளினதும் வாயிலினூலே செல்ல வேண்டுமென்றும் அப்படிச் சென்றாற்றான் இளம்பிள்ளைகள் விபத்துக்களிலிருந்து காப்பாற்றப் படுவார்களென்றும் கூட்டத் தலைவர் கூறினார்.

திரு. கே. இராமலிங்கம் கொழும்பிலிருந்து காலை 4-30 மணிக்கு சாவச்சேரி வரும் மெயிலைச் சந்தித்து சாவச்சேரியிலிருந்து பருத்தித்துறை வீதியாக ஒரு பஸ் பருத்தித்துறை சென்றால் பிரயாணிகளுக்கு கொடுக்கும் கூலி மிச்சமாகும் என்று கூறினார். உதாரணமாகக் கொடிகாமத்திலிருந்து பருத்தித்துறைக்கு இது போன்ற பஸ்சேவை நடைபெறுகிறதென்றும் கூறினார்.

வாலிப முன்னணியின் உப தலைவர் திரு. மு. விநாசித்தம்பி, சாவகச்சேரியிலிருந்து டச்சுறோட் வழியாக கொடிகாமம் சேருவதற்கு பஸ்சேவை நடத்த வேண்டுமென்றும் கூறினார்.

சாவகச்சேரி பெரிய அரசடி வாசிகசாலையின் நிலை பற்றியும் விவாதிக்கப்பட்டது. திரு. எம். ஆலாலசுந்தரம் பேசும் போது, வாலிப முன்னணிகள் தேர்தல் காலத்தோடு நின்றுவிடாமல் தொடர்ந்து இயங்க வேண்டுமென்றும் இவற்றின் மூலம் எம்மிடையேயுள்ள இளம் வாலிபர்களது வேலையில்லாத திண்டாட்டமும் ஓரளவிற்காவது குறையுமென்றும் கூறினார்.

பாராளுமன்ற உறுப்பினர் திரு. நவரத்தினம் பேசிய போது, ஆஸ்பத்திரி, பாடசாலை முதலியவற்றில் நடக்கும் சீர்கேடுகள் பற்றி அத்தாட்சியுடன் நிரூபிக்கும் பட்சத்தில் தாம் இயன்றதைச் செய்வதாகக் கூறினார்.

## மட்டக்களப்பிற்கு 'விசைப்படகு'

மட்டக்களப்பு, வெள்ளி

மட்டக்களப்பைச் சேர்ந்த மண்முனைத்துறை, கன்னங்குடாத்துறை ஆகிய இடங்களுக்கு சுலபமாகச் செல்வதற்கு மக்கள் போக்குவரத்துச்சபை செய்யக்கூடிய 'விசைப்படகுகள்' வழங்கப்பட்டுள்ளன. முந்திய காலங்களில் மரப்படகுகளில் மிகவும் கஷ்டநிலையில் போக்குவரத்துச்செய்த பொதுமக்களுக்கு இந்த விசைப்படகுகள் வசதியான பிரயாணத்துக்கு வழி வகுத்துள்ளது. இந்த 'விசைப்படகுகள்' மட்டக்களப்பு எம். பி. திரு. செ. இராசதுரையின் முயற்சியால் கொண்டு வரப்பட்டது.


வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் பஞ்சரத திருப்பணி நிதி



நன்கொடையை வழங்கினீர்களா வண்ணை வைத்தீஸ்வரன் பஞ்சரதத் திருப்பணிக்கு? இன்றேல் இன்றே நன்கொடை வழங்கி ஊக்குவித்தல் அடியார் கடமையாகும்.

தனாதிகாரி,
தேர்த் திருப்பணிச்சபை,
தேவஸ்தான காரியாலயம்,
வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### அறிவித்தல்

சாவகச்சேரி டிஸ்றிக்கோடு

இல: 2972/P

முருகேசு சின்னத்தம்பி மீசாலை வடக்கு
வழக்காளி.

Vs.

முருகேசு நமசிவாயம் சாவகச்சேரி தெற்கு.

1. நமசிவாயம் வேலுப்பிள்ளை. சாவகச்சேரி தெற்கு. தற்சமயம் அரசினர் தமிழ்ப்பாடசாலை கறுப்பொல.

2. நமசிவாயம் வேலுப்பிள்ளை பெண் இரத்தின பூபதி சாவகச்சேரி தெற்கு.
எதிராளிகள்.

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் தென்மராட்சிப் பகுதி. சாவகச்சேரிக் கோயிற்பற்று சாவகச்சேரி இறை நொச்சியெடி என்னும் பெயருடையதும் உறுதிப்படி 37 பரப்பும் அளவின்படி 36 பரப்பு 10 20/32 குழியையும் கொண்டதுமான காணியை பிரிவிடுதல் செய்வதற்கு மேற்கூறிய வழக்காளி மேற்படி இலக்கத்தில் ஓர் பிரிவிடுதல் வழக்கை தாக்கல் செய்திருக்கிறார் என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்காணியின் எல்லைகள் பின்வருமாறு:

கிழக்கு: முருகேசு நமசிவாயம்.
வடக்கு: றேட்டு,

மேற்கு: சரவணமுத்து தில்லையம்பலம்.

தெற்கு: தரவை நிலம்.

இக்காணியை 1965-ம் ஆண்டு ஐப்பசி மாசம் 24-ம் திகதி உலாந்தா T. சுப்பிரமணியம் அவர்களால் அளந்து 2467-ம் இலக்கப் படத்தில் விபரிக்கப்பட்டுள்ளது.

இக்காணியில் உரிமை கோருபவர்கள் 1966-ம் ஆண்டு மாசி மாதம் 13-ம் திகதி மேற்படி கோர்ட்டில் வெளிப்பட்டு தங்கள் உரிமையைக் கூறும்படி கேட்கப்படுகின்றனர்.

26-1-1966
கோட்டுக்கட்டளைப்படி
செ. சடாச்சரம்
செயலாளருக்காக.

தயாரித்தவர்,
வே. கனகசபை
வழக்காளியின் புறக்ரர்.
1571


## சுதந்திரதின விழாஏற்பாடுகள்

நல்லூர், சனி

தேசிய ஒற்றுமையை வலியுறுத்தும்வகையில்அமைந்த பாடல்களைப்பாடுபவர்களுக்கிடையே போட்டி நடத்திப் பரிசளிக்க வலி-வடக்கு காரியாதிகாரிப் பிரிவு சுதந்திர தின விழாச் செயற்குழு ஏற்பாடுகள் செய்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு காரியாதிகாரி பிரிவிலும் சுதந்திரதின விழா ஏற்பாடுகள் துரிதமாகச் செய்யப்பட்டு வருகின்றன. வலி-வடக்கு காரியாதிகாரி பிரிவில்கொண்டாடப்படும்சுதந்திரதின விழாவுக்கு காரியாதிகாரி திரு. டி. முருகேசபிள்ளை தலைமை வகிப்பார். காங்கேசன்துறை எம்.பி.திரு.எஸ். ஜே.வி. செல்வநாயகம், உடுவில் எம்.பி. திரு. வி. தர்மலிங்கம், செனட்டர் சு. நடராசா ஆகியோரும், வலி—வடக்கிலுள்ள உள்ளூராட்சி மன்றத் தலைவர்களும், கல்லூரி அதிபர்களும் இவ். விழாவில் உரை நிகழ்த்துவர் எனத் தெரிகிறது. தாவடிச் சந்தியிலிருந்து தெல்லிப்பழைச் சந்திவரை சைக்கிள் ஓட்டப்போட்டியும், இசை, நடன நிகழ்ச்சியும் இடம்பெறும்.




## உதைபந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். மேற்கு டிப்போவுக்கும், பருத்தித்துறை டிப்போவுக்கும் ஜின்னா மைதானத்தில் நடைபெற்ற சிநேகிதபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் யாழ். மேற்கு டிப்போ 5—0 கோல்களால் வெற்றியீட்டியது.

இடைவேளைக்கு முன் எஸ். வைத்திலிங்கம் இரு கோல்களும், இடைவேளைக்குப் பின் எஸ். ஞானப்பிரகாசம் இரு கோல்களும் ஆர். தில்லைநாதன் 1 கோலும் அடித்தார்கள். எஸ். செல்வரத்தினம், தியாகராசா ஆகியோர் சிறப்பாக விளையாடினார்கள். மற்றும் ஏ. லோறன்ஸ், எஸ். குமாரகுலசிங்கம், ஏ. சிறில் ஆகியோரும் திறமையுடன் விளையாடினார்கள். எஸ். எம். தாஹீர் மத்தியஸ்தம் வகித்தார்.

## அரசாங்க ஊழியர் இடமாற்றம்

நல்லூர், சனி

யாழ்ப்பாணம் கச்சேரி அலுவலகத்தில் நான்கு ஆண்டுகளுக்குமேல் கடமையாற்றிய பல அரசாங்க ஊழியர்கள் விரைவில் இடமாற்றஞ் செய்யப்படவிருப்பதாக அறியப்படுகிறது.

வெளிகாகாணங்களில் கடமையாற்றும் தமிழ் அரசாங்க ஊழியர்கள் யாழ்ப்பாணம் கச்சேரிக்கு மாற்றலாகி வரவிருப்பதனுல்தான் இந்நடவடிக்கைமேற்கொள்ளப்படவிருப்பதாகத் தெரிகிறது. வெளிமாகாணங்களில் பல்லாண்டுகளி தொடர்ந்து பணிபுரியும் தமிழ் அரசாங்க ஊழியர்கள் தமிழ்ப்பகுதிகளுக்கு மாற்றப்பட வேண்டும் என்று அரசாங்கஎழுதுவினைஞர்சங்கம் வற்புறுத்தியதன் விளைவாக சுமார் 30 ஊழியர் விரைவில் யாழ்ப்பாணத்திற்கு மாற்றப்படவிருப்பதாக சங்கப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

## வேலைவாய்ப்பு யோசனை

மாவிட்டபுரம், வெள்ளி

இப்பகுதியிலுள்ள படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் அளிப்பதற்குரியநடவடிக்கைகளை மேற்கொள்வதென பளை சனசமூக நிலைய நாவலர் வாசிகசாலை செயற்குழு தீர்மானித்துள்ளது.

திரு. வி. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் வெங்காயக் கூடை பின்னும் முயற்சியை உடனடியாக ஆரம்பிப்பதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

மறைந்த பாரதரத்தினம் ஸ்ரீலால் பகதூர் சாஸ்திரியின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானமும், காங்கேசன்துறை பட்டின சபைத் தலைவராக திரு. மூ. திடவீரசிங்கம் தெரிவுசெய்யப்பட்டமைக்குப் பாராட்டும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

## பகிரங்க விசாரணை

ஜாகர்த்தா, ஜன. 28

இந்தோனேஷியப் புரட்சியை ஆரம்பித்த கர்னல் உண்டுங் அடுத்தமாதம் பகிரங்க விசாரணைக்கு உட்படுத்தப்படுவார் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## கைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

உடுப்பிட்டி, வெள்ளி

கரவெட்டி யூனியன் கைப்பந்தாட்டக் கழகச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம் கரவெட்டி பூந்தோட்ட மைதானத்தில் நடைபெற்றது.

உடுப்பிட்டி இமையாணன் விளையாட்டுக் கழகத்திற்கும் வதிரி போமஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் இறுதியாக நடைபெற்ற இப்போட்டியில் இமையாணன் விளையாட்டுக்கழகம் முறையே 11, 15, 15 புள்ளிகளும், வதிரி போமஸ் விளையாட்டுக் கழகம் 15, 0, 8 புள்ளிகளும் பெற்றன.

பரிசளிப்பு விழா போஷகர் திரு. ஏ. எம். வடிவேல் தலைமையில் நடைபெற்றது.

வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரி அதிபர் திரு. எம். எஸ். சீனித்தம்பி ஜே. பி. பரிசில் வழங்கினார். கரவெட்டி யூனியன் கைப்பந்தாட்டக்கழகச் செயலாளர் திரு. அ. துரைச்சாமி, திரு. மு. வேதாபரணம்விளையாட்டுப் போட்டியை வரவேற்றுப்பேசினர்.

## உபதேர்தலில் தொழிற்கட்சி வெற்றி

லண்டன், ஜன. 28

வடஇங்கிலாந்தில் நடைபெற்ற பார்லிமெண்ட் உபதேர்தலில் தொழிற்கட்சி அபேட்சகர் திரு. கெவின் மக்னமாரா 5000 அதிகப்படி வாக்குகளால் வெற்றி பெற்றார்.

இதன்மூலம் காமன்ஸ் சபையில் அரசாங்கத்தின் பெரும்பான்மை 4 ஆக அதிகரித்திருக்கிறது.

தொழிற்கட்சியின் இந்த வெற்றி பிரதமருக்கு நம்பிக்கை அளித்திருப்பதாயும், எனவே அவர் விரைவில் பொதுத் தேர்தலை நடத்தி பெரிய அளவு பெரும்பான்மை பெறும் முயற்சியைமேற்கொள்வார் என்றும் பார்வையாளர்கள் தெரிவித்தனர்.

நேற்று பொருட்களின் விலைஉயர்வுக்காக எதிர்க்கட்சியினர் கொண்டு வந்த கண்டனத் தீர்மானத்தை 3 பெருப்பான்மை வாக்குகளால் அரசாங்கம் தோற்கடித்தது. கன்சர்வேட்டிவ்களுடன் லிபரல்களும் சேர்ந்து வாக்களித்தனர்.

## டட்லிக்கு இந்திரா செய்தி

பம்பலப்பிட்டி, வியா.

ஸ்ரீமதி இந்திராகாந்தி பிரதமராக தெரிவுசெய்யப்பட்டதை பாராட்டி இலங்கைப் பிரதமர் திரு. டட்லி சேனநாயகா அனுப்பிய செய்தியொன்றிற்கு இந்தியப் பிரதமர் இன்றுஅனுப்பிய பதில் செய்தியில் இரு நாட்டின் நல்லுறவு வலுப்பெறவும்— மேலும் மேலும் ஒற்றுமை உண்டாகவும் தாம் விரும்புவதாகவும் இதற்கான பூரண ஒத்துழைப்பை தான் உதவ தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.


REGAL—JAFFNA
NOW SHOWING
David Niven
Peter Sellers
in
THE PINK PANTHER
(TechniColor-Technirama)



## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நீராவியடி பிறவுண் றேட்டில் நாவலர் வீதிக்கு அண்மையில் மூன்றரைப்பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு எஸ். சோமசுந்தரம், இல. 9, பிறவுண் றேட், யாழ்ப்பாணம். 1824

உடுவில் மானிப்பாய் றேட்டு மருதனுமடச் சந்தியிலிருந்து 1/4 கட்டைதூரம் 2 3/4 பரப்பு நிலம். கிணறு, மாமரங்கள் கொண்டது. விபரங்களுக்கு S. R. சுந்தரம், 'சக்தி' உடுவில். 1822

சாவகச்சேரி பொலிஸ் பின் ஒழுங்கையில் கற்குழி வயலுக்கு அருகாமையில் 10 பரப்புக் காணி விற்பனவுக்கு உள்ளது. விரும்புவோர், சண்முகநாதன், பொலிஸ் கந்தோர், யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் தொடர்புகொள்ளவும். 1823

திறம் மெல்லிய கயிறுவிற்பனைக்குண்டு. விபரங்கட்கு: ராஜபக்ஸ, 8A, ரக்கா றேட், யாழ்ப்பாணம். 1825

கொண்டு செல்லக்கூடிய ஆங்கிலத் தட்டச்சு விற்பனைக்குண்டு. விலை ரூபா 250/-விபரங்கட்கு வி. துரைராஜா, வடலியடைப்பு. பண்டத்தரிப்பு. 1817

E.Y.5917சோமசெற்கார் நல்ல நிலையில் விற்பனைக்கு இருக்கிறது. நேரில் வரவும். கே. ஆர். லிங்கம் மில்ஸ், 28, நீராவியடி, யாழ்ப்பாணம். 1816

### தேவை

எங்கள் கிரைண்டிங் மில்லில் மிளகாய்த்தூள் அரைப்பதற்கு ஆள் தேவை. நேரில்வரவும். 20 வயதுக்குட்பட்டவராய் இருத்தல் வேண்டும். கே. ஆர். லிங்கம் மில்ஸ். 28, நீராவியடி, யாழ்ப்பாணம். 1818

எமது தயாரிப்புகளை விற்பனை செய்வதற்கு பெண் விற்பனையாளர்கள் தேவை. இம்மாதம் 30-ம் திகதிக்கு முன் நேரில் வரவும். பாஸ்கரன் இன்டஸ்றீஸ், 44/3, இந்துக்கல்லூரி ஒழுங்கை, (வசந்தா சேலை அச்சகத்திற்கு அருகாமையில்) நீராவியடி, யாழ்ப்பாணம். 1826

### கல்வி

ஜி. சி. ஈ. சாதாரணம்/ உயர்தரம், ஜி. ஏ. கியூ., பி ஏ. பரீட்சைகளுக்கு இலங்கையிலேயே மிகத்திறமையான முறையில் அஞ்சல் மூலம் கல்வி அளிக்கப்படுகிறது. 22 இலவசக் கல்வி சலுகைகளும்வழங்கப்படும். யுனைட்டெட் இன்ஸ்ரிற்றியூட்ஸ், நெல்லியடி, கரவெட்டி. 1777

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, நீரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனாம். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.



நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி-6-30, 9-30 மணி
விடுமுறை நாட்களில் 2-30 மணி
சிவாஜி - தேவிகா
நடித்த
அன்னை இல்லம்

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 6-30, 9-45
கிளரடிசில்வா - சந்தியாகுமாரி
நடித்த
அல்லப்பு கெதற
(சிங்களம்)

இப்பொழுது திரையிடப்படுகிறது

| | | |
|---|---|---|
| கிங்ஸ்லி (கொழும்பு) | நவா (கொம்பனித்தெரு) | விஜயா (மட்டக்களப்பு) |
| மொடேர்ன் (பண்டாரவளை) | மொடேர்ன் (பதுளை) | விஜிதா (அட்டன்) |
| தீவொளி (நுாரளை | கல்யாணி (நாவலப்பிட்டி) | சந்தியா (கம்பளை) |



பூம்புகார்
எஸ். எஸ். ஆர். — விஜயகுமாரி
கே. பி. சுந்தராம்பாள்,
ராஜ்ஸ்ரீ, நாகேஷ் - மனோரமா, ஓ. ஏ. கே. தேவர்
மற்றும் பலர் நடித்து!
அனேகரின் பாராட்டுதலைப்பெற்ற திரைஓவியம்.

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30.
விடுமுறை நாட்களில் காலை 10 மணிக்கு
என். டி. ராமராவ் - மாலதி
நடித்த
பாதாளபைரவி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ராக மூன்று மாதங்கள் வரை கடமையாற்றிவந்தேன். இரவில் எனது பங்களாவுக்குப் போகும்போதும் புகையிரத நிலையத்திலிருந்து திரும்பும்போதும் பன்முறை பாம்புகளின் மீது மிதித்திருக்கிறேன். அப்பாம்புகள் யாரையும் கடித்ததில்லை'' என்கிறார். பாம்புகளில் பல விஷமற்றவை. வயல்களில் விவசாயத்துக்கு உதவியும்செய்கின்றன. ஆகவே எல்லாப் பாம்புகளையும் கொல்லத் தேவையில்லைதான். விஷப் பாம்புகள்கூட, நாம் அவற்றை இம்சிப்போமென்று பயந்துதான் கடிக்கின்றன. அனுலும் ஆபத்தில்லாத தண்ணீர்ப்பாம்பைக் கண்டாலும் நம்மில் பலரும் பயப்படுகிறோம். எந்தப் பாம்பு ஆபத்தானது, எது சாது என்பது நம்மில் பலருக்கும் தெரியவில்லை! அதனுல்தான் எந்தப் பாம்பைக் கண்டாலும் அஞ்சி அதைக் கொல்ல முற்படுகிறோம்.

ஃ ஃ ஃ

அந்த அன்பர் மற்றோர் ருசியான கதையும் சொல்கிறார் கேளுங்கள்: 1869-1896ம் வருடத்தில் துவைனம் ஏசண்டர் காலத்திலே வன்னிப்பகுதிகளில் யானைகள் அதிகமாம். அதனுல் யானைகளைக் கொன்று யானைவால் கொண்டுவருபவர்களுக்கு வெகுமதிகொடுத்துவந்தாராம் அந்த ஏசண்டர்.

இதனை அறிந்த 19ம் நூற்றுண்டின் பக்காத்திருடருள் ஒருவனுன திமிலக்கணவதி யானைகளுக்குப் பின் பதுங்கி நின்று வாலைப் பிடித்துக் கொண்டு யானைகளின் பின் கால்களில் ஏறுவதிலும் மரங்களுக்கருகே யானைகள் சென்றவுடன் வால்களை வெட்டிக்கொண்டு மரங்களில் ஏறிவிடுவதிலும் நிபுணனுனன். வெட்டிய வால்களுக்கும் வெகுமதிபெற்றுனும்.

ஒருநாள் துவைனன்துரை காட்டுக்குள் சென்றபோது யானைகளெல்லாம் வாலில்லாது ஓடினவாம். இது திமிலக்கணவதியின் சேஷ்டையென ஏசண்டருக்குப் புலப்பட்டது. அன்று தொடக்கம் யானைகளைக் கொன்று வால் கொண்டு வருபவருக்கும் வெகுமதி இல்லையாம்!

ஃ ஃ ஃ

தாயும் நீயே தந்தை நீயே சங்கரனே அடியேன், ஆயின் நின்பால் அன்பு செய்வான் ஆதரிக்கின்றது உள்ளம், ஆயமாய காயம் தன்னுள் ஐவர்நின்று ஒன்றலொட்டார், மாயமே என்று அஞ்சுகின்றேன் வலிவலம் மேயவனே.

— திருஞானசம்பந்தர்

## தமிழரசுக் கிளைக் கூட்டம்

மாவிட்டபுரம், வெள்ளி

''புதிய தீர்மானங்களை நிறைவேற்றுவதைவிட முன்னர் வகுக்கப்பட்ட செயற்திட்டங்களை அமுல் நடத்துவதில் ஒவ்வொருவரும் அக்கறை காட்டவேண்டும். புதுத் தீர்மானங்களை நிறைவேற்றுவதினுல் மட்டும் எவ்வித பயனும் ஏற்படப் போவதில்லை'' என்று மாவிட்டபுரம் தமிழரசு வாலிப முன்னணியின் கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் திரு. சோ சேனுதிராசா குறிப்பிட்டார்.

நெசவுநிலையத்தை அமைத்து நடாத்துவதற்கென அமைக்கப்பட்ட பொருளாதார அபிவிருத்திச் சங்கத்தின் நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்கு நால்வர் கொண்ட குழுவொன்று தெரிவு செய்யப்பட்டது. செனட்டர் சு. நடராசாவுக்கு முதலில் வரவேற்பளிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

## மீன்வலைகள் திருட்டுபற்றி அரசாங்கத்திற்கு மகஜர்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணக் குடாக்கடலில் கடந்தசில தினங்களாக நடைபெற்றுவந்த சிறகு வலைக் களவுகள் தற்பொழுது உச்சக்கட்டத்தை அடைந்துள்ளதாகத் தெரிய வருகிறது.

இதனை நிவிர்த்திசெய்யும் பொருட்டும் இக் களவுகளை தடைசெய்யும் நோக்கத்துடனும் பாஷையூர் மக்கள் முன்னேற்றச்சங்க சன சமூகநிலையத்தினர் அரசாங்கத்திற்கு பல ஆலோசனைகளைக் கொண்ட மகஜர் ஒன்றை சமர்ப்பித்துள்ளனர்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

அரசாங்கம் விசாரணைச் சபை ஒன்றை நியமித்து றகுவலைக் களவைத் தடுக்கும் முறைபற்றி தனிப்பட்டவர் கஷ்டமும் கடற்தொழிலாளர் சங்கங்களிடமுமிருந்து அதற்கான காரணங்களை ஆராயவேண்டும்.

ஒவ்வொரு ஊருக்கும் அழியாத வேறு வெவ்வேறு வண்ணம் தீட்டிய வலைகள் கொடுக்கப்பட்டு அரசாங்கத்தில் பதியப்படல்வேண்டும்.

மீன்பிடி இலாகாவுக்கு விரைவாகச்செல்லக் கூடிய மோட்டார்வள்ளம் கொடுத்து பொலிஸ்பகுதியின் உதவியுடன் கடலில் ரோந்து சுற்றினுல் வலைகள் களவுபோவதையும் டைனமெற் வெடி வைத்து மீன் பிடிப்பதையும் தடைசெய்யலாம்.

சிறகுவலைத் தொழிலுக்கு இன்சூரன்ஸ்திட்டம் ஒன்று அரசாங்கத்தினுல் உருவாக்கப்படவேண்டும்.

இக் களவுகள் பற்றி யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினருக்கும், மந்திரிக்கும் இச்சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

## தாயார் கண்டித்தார்: மகன் தற்கொலை

யாழ்ப்பாணம், சனி

பாடசாலைக்குப் படிக்கப் போகாமல் வீட்டில் இருப்பதாக தனது தாயார் தன்னை ஏசிவிட்டாரே என்ற கோபத்தினுல், அல்லைப்பிட்டியைச் சேர்ந்த தியாகராசா (18 வயது) என்ற இளைஞர் கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் நேற்றுக்காலை அல்லைப்பிட்டியில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. ஏ. அமிர்தலிங்கம் நடாத்திய மரண விசாரணையொன்றில் மேற்கண்ட தகவல் தெரியவந்தது.

இறந்தவரின் தாயார் செல்லம்மா சாட்சியமளிக்கையில், தனது மகன் இருதரம் எஸ் எஸ். சி.ப்பரீட்சைஎடுத்துசித்திபெறவில்லையென்றும், திரும்பவும் பாடசாலைக்குப் போகும்படி சொன்னபோது அவர் மறுத்துவிட்டாரென்றுகூறினுர்.

சம்பவம் நடந்த தினத்தன்று காலை அவர் கட்டிலில் படுத்திருந்தாரென்றும், அப்போது அவர் மாமனுர் அங்கு வந்தபோது பாடசாலைக்குப் படிக்கப் போகாமல் வீட்டில் இருப்பதை கண்டித்துத் தான் ஏசியதை அவரிடம் கூறியதாகவும் தனது மகன் வெளியில் ஓடிவிட்டு வந்து நான் 'பொலிடோல்' அருந்திவிட்டேன், இனி யாரையாவது படிப்பியுங்கள் என்று சொன்னுரென்று தெரிவித்தார்.

சகோதரர் ராமசாமி சங்கரப்பிள்ளையும் சாட்சியமளித்தார்

தற்கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டது

## மனித உரிமைகள் தினம்

நல்லூர், வெள்ளி

மனித உரிமைகள் தினவிழா அடுத்த மாதம் 2-ம் திகதி வலி-வடக்கு கிராம முன்னேற்றச் சங்கங்களின் சமாஜத்தினுல் கொண்டாடப்படவிருக்கிறது.

ஏழாலை மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும் இவ்விழாவில் சொற்பொழிவுகளும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவிருக்கின்றன.

## கடற்றொழில் முறை பற்றி கண்டனம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்தில் உள்ள மீனவர்களில் ஒருபகுதியினரின் மீன்பிடித் தொழில் பாதிக்கப்படுவது குறித்து கார்மேல் கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்க மகாநாட்டில் ஆலோசிக்கப்பட்டது. சங்க அலுவலகத்தில் நடைபெற்ற மகாநாட்டுக்கு திரு. செபஸ்தியாம்பிள்ளை தலைமைவகித்தார்.

மனித உணவுக்காகப் பயன்படும் மீனை யாழ்ப்பாணத்திலுள்ள ஒருபகுதிக் கடலோர மக்கள் டைனமெட்வைத்துப் பிடிப்பதை இச்சபை கண்டிப்பதுடன் சட்டவிரோதமான இச்செயலால் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுள்ள ஒருபகுதி மக்கள் பெரும் நஷ்டமடையவும், ஒருபகுதி மக்கள் மாத்திரம் அதிக லாபம் பெறக்கூடியமுறையில் இம்முறை வழிவகுத்துள்ளதென்றும், ஏராளமான மீன் சேதமடைகின்றன என்றும் கூறும் தீர்மானங்கள் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

இத்தீர்மானங்கள் யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கும், யாழ்ப்பாண எம். பி. திரு. பொன்னம்பலத்துக்துக்கும் அனுப்பப்படவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## காணவில்லை

மூன்றும் குறுக்குத் தெருவில் C 179635, 36, 37 இலக்கமுடைய மூன்று கூப்பன்களும், பணமும் அடங்கிய சிவப்பு நிறமுடைய 'லேடிஸ் கான்ட்பாக்' ஒன்று தவறிவிட்டது. கண்டெடுப்பவர்கள் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

1819

## குருக்கள் மரணம்

யாழ்ப்பாணம் ஸ்ரீ இரகுநாதையரின் சிரேஷ்ட புத்திரரும், அஷ்டபந்தன மருந்து தயாரிப்பாளரும், கற்பக விநாயகபூசகருமாகிய பிரம்மஸ்ரீ இ ஞானசேகரக்குருக்கள் அவர்கள் சிவபதமடைந்தார். அன்னுரின் பூதவுடல் தகனக்கிரிகைக்காக கண்டிரோட்டில் இருக்கும் 134-ம் இலக்க வீட்டில்இருந்து இன்று மாலை 2 மணியளவில் கொழும்புத்துறை துண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

## குற்றப்பத்திரிகை கொடுக்கப்பட்டது

பம்பலப்பிட்டி, வெள்ளி

ஜனவரி மாதம் 8-ந்திகதி அடையாள வேலைநிறுத்தத்தில் பங்குபற்றியதற்காக தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்ட எல்லா அரசாங்க ஊழியர்களுக்கும் அரசாங்கம் குற்றப்பத்திரம் வழங்கியுள்ளது.

பொதுசேவைச்சட்டவிதிகளுக்கு முரணுக நடந்ததற்காக ஏன் அரசாங்க சேவையில் நின்றும் வேலைநீக்கம் செய்யக்கூடாதென அடையாள் வேலைநிறுத்தத்தில் பங்குபற்றியவர்கள் அரசாங்கத்திறுல் கேட்கப் படுவார்கள்.

குற்றப்பத்திரங்களுக்கு அரசாங்க ஊழியர்கள் பதில் கொடுத்த பின்னரே இவர்களை எவ்வாறு தண்டிக்கவேண்டும் என அரசாங்கம் முடிவுசெய்யும். புகையிரதப் பகுதியில் 450ஊழியர்கள் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள்.

## கேரளத்தில் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றுண்டி தொழிற்சாலை ஒன்றும் சேதப்படுத்தப்பட்டது. திருவனந்தபுரம் புகையிரதநிலையத்துக்கும், எக்கவுண்டன் காரியாலயத்துக்கும் சேதம் விளைவிக்கப்பட்டது.

இதற்கிடையில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமையிலிருந்து கூப்பன் ஒன்றுக்கு 140 கிராம் அரிசி வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. முன்னர் 160 கிராம் வழங்கப்பட்டு 120 கிராமமாக குறைக்கப்பட்டதை தொடர்ந்தே அரசியல் கட்சிகள், மாணவர்கள் ஆகியோர் சேர்ந்து இவ்வித ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

## இடமாற்றம்

பருத்தித்துறை, வெள்.

பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தர பாடசாலை ஆசிரியை திருமதி பொ. தணிகாசலம்கண்டிகெங்கல தமிழ்கலவன்பாடசலைக்கு மாற்றம் செய்யப்பட்டு பின் மீண்டும் பருத்தித்துறை மெதடிஸ் பாடசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். அவரது கணவர் திரு. என். தணிகாசலம்தும்பளைச்சிவப்பிரகாச வித்தியாசாலையில் இருந்து கண்டி கெங்கல தமிழ்க்கலவன் பாடசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

# பரிசு

## ரூ. 225-00 --- 225-00

## சிறுகதை -- கவிதை போட்டி

### ஆரம்பம் 28-1-1966—முடிவு 12-2-1966

எழுத்தாளர்களுக்கும் கவிஞர்களுக்கும் 'ஈழநாடு' வாரமலர் மற்றுமொரு வாய்ப்பு அளிக்கிறது.

சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்பு வாரத்தையொட்டி 'ஈழநாடு' நடத்திய சிறுகதை, கவிதைப் போட்டியில், குறுகியகால அறிவித்தல் கொடுத்தபோதிலும், பெருந்தொகையானேர் கலந்து கொண்டனர்.

எனினும் போட்டியில் கலந்துகொண்டவர்கள் பலர் போட்டியில் பங்கு கொள்வதற்குக் கொடுக்கப்பட்ட காலஎல்லை போதாது எனக் குறைபட்டுக் கொண்டனர். எனவே இம்முறை இப்போட்டியில் கலந்து கொள்வதற்கு இரண்டு வாரங்கள் கொடுக்க முடிவு செய்துள்ளோம்

யாழ்ப்பாணம் இரத்ததான சங்கத்தினுல் இப்போட்டி ஒழுங்கு செய்யப்படுகிறது.

### போட்டி விதிகள்

1. இரத்ததானத்தின் நற்பயனை எடுத்துக் கூறுவதாக சிறுகதை, கவிதையின் 'கரு' அமைந்திருக்க வேண்டும்.
2. சிறுகதை 'ஈழநாடு' பத்திரிகையின் ஒருபக்கத்துக்கு மேற்படாததாகவும் கவிதை 'ஈழநாடு' பத்திரிகையின் கால் பக்கத்துக்கு (ஒன்றேகால் கலம்) மேற்படாததாகவும் இருக்க வேண்டும்.
3. போட்டியில் பங்குபற்றுபவர்கள் புனை பெயரில் எழுதலாம். ஆனுல் தங்கள் சொந்தப் பெயரையும் சரியான விலாசத்தையும் தெளிவாக எழுத வேண்டும்.
4. போட்டிக்குவரும் கதைகளையும் கவிதைகளையும் தகுதிவாய்ந்த எழுத்தாளர், கவிஞர்களைக் கொண்ட ஒரு குழு பரிசீலனை செய்து பரிசுக்குரியவைகளைத் தேர்ந்தெடுக்கும். எனினும் போட்டி சம்பந்தமான இறுதித் தீர்ப்பு வழங்கும் உரிமை 'ஈழநாடு' ஆசிரியருக்கே உண்டு.
5. 'ஈழநாடு' காரியாலயத்தில் வேலை செய்யும் ஊழியர்களும், அவர்களின் உறவினர்களும் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

### பரிசு விபரம்

மிகச் சிறந்த சிறுகதையாகத் தெரிவு செய்யப்படும் சிறுகதைக்கு 100 ரூபாயும், மிகச் சிறந்த கவிதைக்கு 100 ரூபாய் பரிசும் வழங்கப்படும்.

இரண்டாவது சிறந்த கதைக்கும், கவிதைக்கும் தலா 75 ரூபாயும் மூன்ருவது சிறுகதை, கவிதைக்கு தலா 50 ரூபாயும் பரிசாக வழங்கப்படும்.

**போட்டி ஆரம்பம் 28-1-1966 — முடிவு 12-2-1966**

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் [illegible] அச்சகத்திலுள்ள அவர்களது [illegible] அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஜனவரி மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org